REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 11௳ வெள்ளி (22—2—57) ★ ★ வெளியூர்: மாசி 12௳ சனி (23—2—57) [இதழ் 220

காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலகும்?

★

லண்டன், பிப். 21—

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கு விரோதமாக பிரிட்டன் வாக்களித்திருப்பதால், காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறக்கூடுமென்று செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹை கமிஷனர், இத்துறையில் இந்தியாவில் நிலவும் சூழ்நிலைபற்றி அறிவிக்க விரைவிலேயே பிரிட்டனுக்குச் செல்லக்கூடுமாம்!

ரூ. 46 இலட்சம் பாழடிக்க டெல்லி முடிவு

காஷ்மீர்: பாதுகாப்புச் சபை தீர்மானம்

இந்தியாவின் அடுத்த நடவடிக்கை என்ன?

அன்னியத் துருப்புகளுக்கு இடமில்லை என்கிறார் நேரு

நியூயார்க், பிப். 21—

காஷ்மீர் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் தேடுவதற்காக, சுவீடன் பிரதிநிதி குன்னர் ஜாரிங் என்பாரை இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அனுப்புவது என்று, ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானம் இரண்டாவது முறையாகக் கொண்டுவரப்பட்டபோது, ஆதரவாக, 10 நாடுகள் ஓட்டளித்திருக்கின்றன; எவரும் எதிர்க்கவில்லை; ரஷ்யா, வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

"இந்தத் தீர்மானத்தில், கடந்த சன. 24-ந் தேதியன்று ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானமான, 'காஷ்மீரில், அப்போதுள்ள நிலையே நீடிக்கவேண்டும்,' என்ற வாசகங்களும் இடம் பெற்றுள்ளன; இது மிக வருந்தற்குரிய நிலை என்று இந்தியப் பிரதிநிதி கிருஷ்ண மேனன் கூறியுள்ளார்.

முதல் தீர்மானம்: ரஷ்ய ரத்து அதிகாரம்

காஷ்மீர் விவகாரம் பற்றி இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்பதற்காக, சுவீடனைச் சேர்ந்த குன்னர் ஜாரிங் செல்லவேண்டும் என்றும் 'காஷ்மீருக்கு தற்காலிகமான ஐ. நா. படை ஒன்று அனுப்பவேண்டும்' என்றும் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நான்கு வல்லரசுத் தீர்மானத்தை ரஷ்யா தனது ரத்து அதிகாரத்தைப் பிரயோகம் செய்து தோற்கடித்தது.

கூட்டு ஆக்கிரமிப்பு

அகோலா, பிப். 21—

ஐ. நா. பாதுகாப்புச் சபையில், ரஷ்யா ரத்து அதிகாரம் பிரயோகம் செய்து தோற்கடித்துவிட்ட தீர்மானம் குறித்து பண்டித நேரு கருத்தறிவிக்கையில், 'இது கூட்டுஆக்கிரமிப்பிற்கு வழி செய்வதாகும்' என்று கூறியிருக்கிறார்.

'இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகள் இந்தியா மீது பகிரங்கமாகவே தங்களுக்குள்ள பகையைக் காட்டிக்கொண்டுள்ளன என்று நாம் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை,' என்றும் பண்டித நேரு கூறியிருக்கின்றனர்.

அணு ஆயுதத் தாக்குதல்

'பாகிஸ்தான் அணு ஆயுதத் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது,' என்று மேனன், ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தெரிவித்திருக்கிறார்.

அன்னிய துருப்புகளை அனுமதிக்கமாட்டோம்

'என்ன நிகழ்வதாயினும், எங்கள் நிலையின் விளைவுகள் என்னவாயிருந்தாலும், நாங்கள், இந்தியாவில் அன்னியத் துருப்புகள் எதையும் அனுமதிப்பதற்கில்லை,' என்று பண்டித நேரு இங்கு கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தூண்டியது எவர்?

பம்பாய், பிப். 21—

'காஷ்மீர்மீது ஆக்கிரமிப்புச் செய்யுமாறு பாகிஸ்தானை தூண்டியவர்கள் வெள்ளைக்காரர்களே' என்று காஷ்மீர் முதன் மந்திரி பக்ஷிகுலாம் முகம்மது தெரிவித்திருக்கிறார்.

இதுமட்டுமன்னியில், மேற்கு நாடுகள் பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியாவிற்கு எதிராக சதிசெய்வதாகவும் கூறியிருக்கிறார், பக்ஷி.

இஸ்ரேலின் சண்டித்தனம்!

நிர்ப்பந்த முறைகளை ஐ. நா. கையாளும்?

வாஷிங்டன், பிப். 21—

காசா, அகாபா பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு இஸ்ரேலுக்கு, அமெரிக்கத் தலைவர் விடுத்திருந்த புதிய வேண்டுகோளை இஸ்ரேல் நிராகரித்துவிட்டதாக, ஐ. நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், ஐ. நா. தீர்மானத்தின் கட்டளைப்படி காசா — அகாபா பகுதிகளிலிருந்து இஸ்ரேலை வெளியேற்றுவதற்கு நிர்ப்பந்த முறைகளைப் பிரயோகிப்பதைத் தவிர ஐ. நா.-வுக்கு வேறு மாற்று வழி இருக்கவில்லை என்று அமெரிக்கத் தலைவர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியைப் பரப்ப எட்டு புதிய திட்டங்களாம்

பரிசு தருகிறோம்! பணம் தருகிறோம்!

வஞ்சகவலை விரிக்கும் பெரிய மனிதர்களின் இழிசெயல்

புதுடில்லி, பிப். 21—

தென்னாட்டு மக்கள் தரும் வரிப் பணத்திலிருந்து டில்லி ஏகாதிபத்தியவாதிகள், இந்தியைப் பரப்புவதற்கு என்று கூறி, ரூ. 46,02,000 பாழடிக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தி மொழி வழங்காத மாநிலங்களில் இந்தியைப் பரப்புவதற்கென்று எட்டு புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவாம்.

இந்த எட்டு திட்டங்களையும் திட்டக் குழு அங்கீகரித்துவிட்டதாம்.

கலைக் களஞ்சியம் தயாரித்தல், இந்தி மொழி வழங்காத பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை இந்திமொழிப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று இந்தி பற்றி விவாதம் நடத்துதல், பிரபல இந்தி மொழி வல்லுநர்களை இந்தி வழங்காத பகுதிகளுக்கு அனுப்பி சொற்பொழிவு நிகழ்த்துதல், இந்தி புத்தகங்களுக்குப் பரிசு வழங்குதல் போன்ற திட்டங்களுக்காக, இந்த ரூ. 46 இலட்சமும் செலவிடப்படுமாம்.

இந்தி மொழியைப் பரப்புகிறோம் என்ற பெயரில், இந்தியை எதிர்க்கும் தென்னாட்டவரை வஞ்சகமாக வீழ்த்துவதற்கு இதுபோன்று, 'பரிசு தருகிறோம்—பணம் தருகிறோம்,' என்பனபோன்ற இழிசெயல்களில் டில்லிப் பெரியவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை விழிப்புற்றுவரும் தென்னாட்டு மக்கள் கூர்ந்து கவனித்துத்தான் வருகின்றனர்.

சென்னை - ஆயிரம்விளக்கு தொகுதியில் நேர் போட்டி

'தி. மு. கழகம்தான் மக்கள் ஆதரவு பெற்ற மகத்தான இயக்கம்'

போட்டியிலிருந்து விலகிக்கொண்ட தோழர் தம்புவின் விளக்கம்

சென்னை—ஆயிரம் விளக்குத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகர் தோழர் ஏ.பி.வி. ஆசைத்தம்பி, காங்கிரஸ் கட்சி அபேட்சகர் கே. வெங்கடசாமி ஆகியவர்களை எதிர்த்து நானும் தேர்தலில் போட்டியிட முனைந்தேன். நான் அத்தொகுதி வாக்காளர்களை சந்தித்தபோது பெற்ற அனுபவத்தின் காரணமாக எதேச்சாதிகாரம் படைத்த காங்கிரசை முறியடிக்கக்கூடிய சக்திவாய்ந்த இயக்கம் தி. மு. கழகம் என்பதை மனப்பூர்வமாக உணருகிறேன். எனவே மக்களின் பேராதரவு பெற்று இயங்கும் தி. மு. கழகத்திற்கு, எனது போட்டியால் வீண் தொல்லை கொடுத்து கொடுமைகளை விளைவித்து வரும் காங்கிரசிற்கு உதவியாயிருக்கும் சூழ்நிலையை உருவாக்குவது நம் தாயகத்திற்குச் செய்யும் பெருந்தீங்கு என்பதை உணர்ந்தேன். எனவே, நான் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதுடன், எனக்காக உதவி புரிந்துவந்த தோழர்கள் அனைவரும் — குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும் தி. மு. கழகத்தின் வெற்றிக்கு உறுதுணையாயிருந்து உண்மையான சனநாயகம் தழைத்தோங்கச் செய்யுமாறு வேண்டிக்கொள்ளுவதுடன், மற்ற தொகுதிகளிலும் சுயேச்சை அபேட்சகர்கள் தி. மு. கழக வெற்றிக்காக விட்டுக்கொடுப்பார்கள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

அன்பன்,
தம்பு

குறிப்பு: தோழர் தம்பு அவர்களின் சனநாயகப் பண்பிற்கும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைக்கும், தி. மு. கழகத்தின் வெற்றியில் அவருக்குள்ள பேரார்வத்திற்கும் தி. மு. கழகம் தனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

வடநாடு வளரும் வகை!

செயற்கை பெட்ரோல் உற்பத்திக்கு தொழிற்சாலை

டெல்லியை வற்புறுத்தி மத்தியப் பிரதேச சர்க்கார் பெற்றதாம்!

போபால், பிப். 20—

கிழக்கு மத்தியப் பிரதேசத்தில் கோர்பா எனும் இடத்தில் செயற்கை பெட்ரோல் எண்ணெய் உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்று நிறுவ ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

இங்கு ஏற்கனவே மாநில, மத்திய சர்க்கார்களின் கூட்டு முயற்சியில் ரூ. 21 கோடி செலவில் நிலக்கரிச் சுரங்க வேலை துவங்கியிருப்பதால், இந்த செயற்கை பெட்ரோல் உற்பத்தித் தொழிற்சாலையும் இங்கேயே அமைக்கப்படுகிறதாம்.

மேலும், இந்த செயற்கை பெட்ரோல் தொழிற்சாலையை தங்கள் மாநிலத்திலேயே நிறுவ வேண்டுமென மத்தியப் பிரதேச சர்க்கார் டெல்லியை வற்புறுத்தினர்களாம்!

செயற்கை பெட்ரோல் உற்பத்தி என்பது சிக்கனமானதல்ல—அதிகச் செலவாகக்கூடியதுதான் என்றாலும், இந்தியாவில் இயற்கையான எண்ணெய் ஊற்றுக்கள் அதிகம் இல்லையென்றும், மேலும், நிறுவப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் இந்தியாவின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்றும், தொடர்ந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்றும், அதனாலேயே, அதிகச் செலவானாலும் பரவாயில்லை என்ற கருத்தில், செயற்கை பெட்ரோல் உற்பத்திசெய்ய உத்தேசிப்பதாகவும் கூறப்படுகிறது.

நிபுணர் மறைவு

ரஷ்யாவில் நவீனத் தொழில் நுட்பப் பிரபல நிபுணரும், அணு சக்தி உற்பத்தியின் பொறுப்பாளருமான வியா செஸ்லோவ் அலெக்சாண்டரோ வீச் மாலிசேவ் இன்றிரவு இயற்கையெய்தினர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 22—2—57 வெள்ளி

தமிழ் மகனின் தலையாய கடமை

நடைபெற இருக்கின்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மாறுபட்ட அடிப்படைக்கொள்கையைக் கொண்டு இரண்டே இரண்டு கட்சிகள்தான் தமிழ்மக்கள் ஆதரவைக் கோருகின்றன. அவ்விரண்டு கட்சிகளில் ஆளும் காங்கிரசுக் கட்சி ஒன்று; மற்றொன்று நமது திராவிட முன்னேற்றக் கழகம்.

காங்கிரசுக் கட்சியானது அகில இந்திய அமைப்பைக் கொண்டது. எனவே, தமிழ்நாட்டுக்காங்கிரசிற்குத் தனித்து இயங்குகின்ற ஆற்றல் அறவே கிடையாது.

ஆனால் நமது முன்னேற்றக் கழகத்தின் நிலை அதுவல்ல. எனவே, தமிழ் மக்களின் நல்வாழ்வும் தமிழ்நாட்டின் செல்வப் பெருக்கமும்தான் நமது கழகத்தின் உயிர் மூச்சு.

அகில இந்திய அமைப்பான காங்கிரசுக் கட்சியின் ஒரு உறுப்பாக தான் இருந்து வருகின்ற காரணத்தினால், தமிழ் மக்களின் நலத்திற்கும் தமிழ்த் தாயகத்தின் வளத்திற்கும் முதலிடம்தந்து செயலாற்றத் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியால் என்றும் முடியாது. வலிவுள்ள தலைமையானாலும் வலிவற்ற தலைமையானாலும் தமிழ் மக்கள் நலத்தில் முக்கியத்துவம் காட்டுவதற்குத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியால் இயலவே இயலாது. அதுவுமன்றி, தமிழ்நாட்டிற்கு சிறப்பிடம் தேட வேண்டும் என நினைப்பதும் கூட, அகில இந்திய தேசியத்திற்குத் துரோகம் செய்வது போலாகும் என்றுங்கூடக் கருதப்படும்.

அகில இந்தியக் காங்கிரசு அமைப்பை இயக்கி வருவது தமிழ்நாட்டுத் தலைமை அல்ல. அத்தகு வாய்ப்பு தமிழ்நாட்டுக்கு இதுவரை என்றும் இருந்ததில்லை. இனி எப்பொழுதும் இருக்கப்போவதுமில்லை.

அகில இந்தியக் காங்கிரசின் தலைமை உத்திரப் பிரதேசத்தில் சரண்புகுந்து இருக்கிறது. இந்தப் பழம்பெரும் அனுபவ உண்மையை, தங்களை மட்டுமே 'யதார்த்தவாதிகள்' எனப் பீத்திக்கொள்ளுகிறவர்களாலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

காங்கிரசு அமைப்பை ஆட்டிப்படைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ள உத்திரப் பிரதேசம், அந்த அமைப்பை வலிவுள்ள சாதனமாகக்கொண்டு, இந்தியப் பேரரசில் ஆதிக்கம் செலுத்திவருவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். எனவே, இந்தியப் பேரரசு உத்திரப் பிரதேசத்தாரின் ஊராட்சிமன்றமாக இருந்துவருவதில் ஆச்சரியம் இல்லை.

இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுநலன் எனச் சொல்லப்படுவதற்கு எதிராக உத்திரப் பிரதேச நலனைக் காத்து வருவதில் எவ்வளவோ துறைகளில் இந்தியப் பேரரசு ஈடுபட்டு இருக்கிறது. எடுத்துக்காட்டாக சர்க்கரை ஆலை இடமாற்ற விவகாரத்தைக் குறிப்பிடலாம்.

சிக்கனமான செலவில் உற்பத்திச் செய்து மலிவான விலையில் சர்க்கரையை மக்களுக்கு விற்க வேண்டுமானால், உத்திரப் பிரதேசத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் பலவற்றை தென்னாட்டிற்கு மாற்றியாக வேண்டும் என்று, அதற்குரிய நிபுணர்கள் கூறினர். அதன்படி உத்திரப் பிரதேசத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் சிலவற்றைத் தமிழ்நாட்டிற்கு மாற்ற வேண்டும் எனத் தனது கருத்தை இந்தியப் பேரரசு வெளியிட்டது.

இந்தியப் பேரரசின் இக்கருத்தைக் கேள்வியுற்றதும், உத்திரப் பிரதேசக் காங்கிரசுக் கட்சி சீறி எழுந்தது. இந்தியத் துணைக்கண்ட மக்களின் பொதுநலனைக்காட்டிலும் தம் பிரதேச மக்களின் நலன்தான் முக்கியம் எனக் கருதி, தமிழ்நாட்டிற்குச் சர்க்கரை ஆலைகள் சிலவற்றை இடம் பெயர்க்க வேண்டும் என்ற இந்தியப் பேரரசின் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கிவிட்டது உத்திரப் பிரதேச காங்கிரசு ஆட்சி.

உத்திரப் பிரதேசக் காங்கிரசு ஆட்சியின் சீற்றங் கண்டு, இந்திய மக்கள் அனைவருடைய பொது நலனையும் உத்திரப் பிரதேச மக்கள் சிலருடைய நலனுக்காகப் பலி கொடுத்துவிட்டது, இந்தியத் துணைக்கண்ட மக்கள் அனைவருடைய பொது நலனையும் பாதுகாக்கக் கடமை கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்தியப் பேரரசு! இந்தியத் துணைக்கண்ட மக்கள் அனைவருக்கும் மலிவான விலையில் சர்க்கரை கிடைக்கச் செய்யக் கருதிய இந்தியப் பேரரசும், அதைப் பேச்சளவிலேயே சாகடித்துவிட்டது.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு பகுதி மக்களின் நலத்தைவிட, தனது மக்களின் நலமே மேலானது எனச் செயல்பட்டு வருவதில் உத்திரப் பிரதேசத்திற்கு ஈடாக வேறு எந்த மாகாணத்தையும் எண்ண முடியாது. அதுவுமன்றி, மற்ற மாகாணங்களின் செல்வப் பெருக்கத்தைச் சீரழித்து, தனது பிரதேசத்தின் செல்வப் பெருக்கத்திற்கு ஆக்கம் தேடுவதிலும், உத்திரப் பிரதேசத்திற்கு ஒப்பாக வேறு ஒரு மாகாணத்தையும் குறிப்பிட இயலாது.

அடிக்கடி மாற்றப்பட்டு வரும் இந்தியப் பேரரசின் ஏற்றுமதி கொள்கையின் விளைவாக, புகையிலை உற்பத்தியில் முன்னணியில் இருந்துவரும் ஆந்திராவில், உற்பத்தியான புகையிலையில் பெரும் பகுதி, பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாமல் தேங்கிவிட்டது. அந்தத் தேக்கத்தின் விளைவாக இலட்சக் கணக்கான ரூபாயை ஆந்திர விவசாயிகள் இழந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில், தனது பிரதேசத்தில் புகையில் உற்பத்திக்கு புதியதோர் திட்டம் வகுத்து, முதல் முறையாகப் புகையிலையைப் பயிரிடவும் முன்வந்தது உத்திரப்பிரதேசம். இதற்கு முன் எப்பொழுதும் உத்திரப்பிரதேசத்தில்புகையிலை பயிரிடப்பட்டது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

உத்திரப்பிரதேசத்தில் புகையிலை உற்பத்தி விரிவாக்கப்படுகின்ற அளவிற்கு, ஆந்திரப் பிரதேசத்தில் புகையிலை உற்பத்தி குறைவது எதிர்பாக்கக் கூடியதேயாகும். இவ்வுற்பத்திக் குறைவின் பலனை புகையிலை உற்பத்தியையே நம்பி வாழ்ந்துக்கொண்டிருந்த ஆந்திர விவசாயிகளின் அல்லல் ஏற்கனவே இருந்ததைவிட கூடுதலாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

இதுபோன்றே, கேரளத்தில் இரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் விவசாய மக்களின் வாழ்வில் விளையாடவும் உத்திரப்பிரதேசம் இப்பொழுது முன்வந்து இருக்கிறது. அந்தத் தீவினைக்கு இந்தியப் பிரதேசமும் உடைந்தையாக இருந்து வருகிறது.

அதாவது, செயற்கை முறையில் இரப்பரை உற்பத்திச் செய்வதற்கான ஒரு செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலையை உத்திரப்பிரதேசத்தில் துவங்க இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கிறது. இத்தகவல் தெரிந்ததும், தங்கள் இரப்பர் விவசாயத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று கேரள நாட்டில் இயற்கை இரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் கூப்பாடு போடத் தொடங்கினர். இயற்கை இரப்பர் விவசாயத்தை விரிவாக்குவதின் மூலமே, இந்தியத் துணைக்கண்டத்தின் பெருகி வரும் இரப்பர் தேவையைப் பூர்த்திச் செய்யமுடியும் என, கேரள இயற்கை இரப்பர் உற்பத்தியாளர்கள் காரணம் காட்டி, உத்திரபிரதேசத்தில் செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலை ஏற்பாட்டை எதிர்த்துள்ளனர். இருந்தாலும் உத்திரப் பிரதேசத்தின் கைப்பாவையாக ஆடிவரும் இந்தியப் பேரரசா, கேரள விவசாயிகளின் கூக்குரலுக்கு செவிசாய்க்கப் போகிறது?

எனவே, உத்திரப் பிரதேசத்தாரின் ஏகபோக ஆதிக்கத்தில் தமிழ்நாடு காங்கிரசு இயங்கி வருகின்ற வரையில், தமிழ் மக்களுக்கு நல்வாழ்வு தேடித்தர இங்குள்ள காங்கிரசுக் கட்சியால் முடியவே முடியாது. எனவே, தமிழ் மக்களின் நியாயமான நலன்களையும், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியையும் தனது தேர்தல் திட்டமாகக் கொண்டுள்ள நமது முன்னேற்றக் கழகத்தை, ஆதரித்து தேர்தலில் வெற்றி பெறச் செய்யவேண்டியது, ஒவ்வொரு தமிழ் மகனின் தலையாய கடமையாகும்.

'செயல்வீரர்களடங்கியது தி. மு. க.'

'அவர்களாலேயே எங்கள் கண்ணீரைத் துடைக்க முடியும்'

'கழகம் வெற்றிபெற உழையுங்கள்'

தாயக மக்களுக்கு இலங்கைத் தமிழர் உருக்கமான வேண்டுகோள்

'இலங்கை போன்ற வெளிநாடுகளில் உள்ள தமிழர்தம் துயர் துடைக்க திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான் முடியும்' என்பதை உணர்ந்து 'தாயக மக்கள் வரும் தேர்தலில், தி. மு. கழகத்திற்கு உழைத்து, ஒட்டளித்து வெற்றி தேடித்தர வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டு இலங்கைவாழ் தமிழர்கள் உருக்கமாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்; அந்த அறிக்கையைக் கீழே தருகிறோம்:—

"தேர்தல் களத்திலே தினந் தினம் வந்து குவியும் திருகுதாள தெகிடுதத்தச் செய்திகளுக்கு மத்தியிலே, 'ஈழத் திருநாட்டில் இடர் பட்டு ஏங்கிக்கிடக்கும் எங்களின் ஏக்கக் குரலையும் கொஞ்சம் செவிமடுத்துவிட்டுச் செயலாற்ற முற்படுங்கள்,' என்று தமிழக வாக்காளர்களாகிய உங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம். தேர்தல் காலங்களில்தான் புதுப்புது புளுகுகள், புதுப்புது உருவங்களிலே புத்துயிர் பெற்றுப் புரண்டோடிவந்து மயக்கும்! திகைக்கவைக்கும்! வாக்காளர்களாகிய வாய்மைமிக்க—வன்மைமிக்க உண்மையாளர்கள், கொஞ்சம் உறுதியுடனும் உள்ளத் தெளிவுடனும் இந்தப் புளுகுகளை அணுகினால், நிச்சயம் அவைகள் புழுதிக் காற்றோடு சேர்ந்து மண்ணோடு மண்ணாகி மறைந்து விடும்; உண்மை உதயசூரியனைப் போல் வெளிக் கிளம்பிவிடும்.

"புளுகுவதிலும் புதுப்புது 'புருடா'க்கள் விடுவதிலும் ஆட்சிபீட அதிபர்களான காங்கிரசார் மிகவும் வல்லவர்கள். அதற்கேற்றாற்போல் எல்லா சாதனங்களும் அவர்களிடம் அமைந்துகிடக்கின்றன. ஆகவேதான், 'கழுதையை நிறுத்தினாலும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடு,' 'போலோ காந்திக்கு ஜே—போடு அம்மாவுக்கு ஓட்டு,' 'போலோ பாரதமாதாவுக்கு ஜே—போடு ஐயாவுக்கு ஓட்டு' என்றெல்லாம் முழக்குகிறார்கள் — மிரட்டுகிறார்கள். இந்த வெத்து வேட்டுச் சத்தம் வெறும் பித்தலாட்டம் என்று கூறாமல் கூறி, 'படித்தவனுக்கு ஓட்டுப் போடு' என்று பறைசாற்றுகின்றார் அவர்கள் முகாமைச் சேர்ந்த ஆச்சாரியாரவர்கள்!

"இலங்கையிலே இந்தியப் பரம்பரையினர்களாகிய தென்னாட்டவர்களுக்கு எந்த வித உரிமையும் மதிப்பும் மரியாதையுமில்லாமல் போனதற்கே முதற் காரணம் நேரு பெருமகனாரின் வெளிநாட்டுக் கொள்கைதான்! ஆசியா கண்டத்தில் தன்னை ஆதரிக்க ஒரு சில நாடுகள் வேண்டுமென்பதற்காக, வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தென்னாட்டவர்களையே பலிகொடுத்துவிட்டார், ஆசியாவின் ஜோதி! இலங்கையின் குடியுரிமைக்கு மனுச் செய்திருந்த இலட்சக் கணக்கானவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டு நாடற்றவர்களாக மாற்றப்பட்டுவிட்டனர்; இது பற்றி ஒரு வார்த்தைகூட நேரு அரசாங்கம் கூறவில்லை. கூறினால் அவரது உலகப் புகழுக்குக் 'கறை' ஏற்பட்டுவிடுமென எண்ணியிருக்கின்றார்! சென்னை ஆட்சியும் செயலற்றுக் கிடக்கிறது!

"மொழியுரிமை கோரி கொழும்பு நகரத்தில் தமிழ் மக்களின் அறப்போர் நடைபெற்றபோது, கடையர்களும் காலிகளும் வேண்டுமென்றே தமிழர் கடைகளையும் தமிழர்களையும் தாக்கிக் கொள்ளையடித்தனர். அந்த நேரத்தில் நேரு பண்டிதரின் தூதுவராலயம் இங்கு என்ன செய்துகொண்டிருந்தது, தெரியுமா? இந்தியப் போர்க் கப்பல்களான 'கோதாவரி', 'கோமதி'யில், கொழும்பு துறைமுகத்தில்(கொக்டைல்) நடனம் நடத்திக்கொண்டிருந்தது என்று கூறும்போது உண்மையில் நாம் அனைவரும் வெட்கித் தலைகுனியத்தான் வேண்டும். ஏன் அப்படி நடந்துகொண்டனர் என்றால், அடிபட்டவனும் உதைபட்டவனும் உடைமையை இழந்தவனும், ஏமாந்த தமிழன்தானே! கொழும்பிலிருக்கும் இந்த இந்தியத் தூதுவராலயத்தில்கூடத் தென்னாட்டுத் தமிழன் துச்சமாகத்தான் மதிக்கப்படுகின்றான் என்ற உண்மையை அன்பு கூர்ந்து இங்கு தொல்லைப்பட்டு வந்து, அங்கு சேர்ந்திருக்கின்ற உங்களின் உறவினர்களை, நண்பர்களைக் கேட்டுப் பாருங்கள் தோழர்களே, கேட்டுப் பாருங்கள்!

"1954-ல் கம்பளையில் நடைபெற்ற மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களின் மாநாட்டில் சொற்பொழிவாற்றுவதாக ஒப்புக்கொண்டிருந்த வீரர் நேரு, 'இலங்கை அரசாங்கம் அனுமதிக்கமாட்டேனென்கிறது' என்று கூறி, அந்த மிகப் பெரிய கூட்டத்தில் சொற்பொழிவாற்ற கடைசி நேரத்தில் மறுத்துவிட்டதிலிருந்து, சிறிய இலங்கை, பெரிய நாட்டின் பிரதமரை எப்படி ஆட்டி அசைத்து வைத்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் புரியும். இலங்கையில் மலிவான பொருள், தமிழனின் உயிரும், உடமையும் தானென்பதை மறந்துவிடாதீர்கள்!

"தமிழன் மொழி இலங்கையில் தாழ்த்தப்பட்டு ஆழ்த்தப்பட்டு வருகிறது. தமிழன் தாக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஓட்டப்பட்டு வருகிறான். தமிழ்த் தாய்மார்களின் கற்பு சூறையாடப்பட்டு வருகிறது என்பதற்கு மன்னாரில் நடைபெற்றுவரும் முத்தம்மாள் வழக்கு உலகுக்கு உரைக்கும். எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டு, நாடற்றவர்களாக—நாதியற்றவர்களாக மதிக்கப்பட்டு உயிரைச் சுமந்து

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தமிழர்களுக்கு எதிராகப் பகிஷ்கார நடவடிக்கைகள்

சிங்கள வெறியர்களின் முயற்சி

கொழும்பு, பிப். 20—

இலங்கை வாழ் தமிழருக்கு எதிராக, இலங்கையில் சிங்கள மொழி பேசிவரும் பகுதிகளில் உள்ள தமிழர் கடைகள் போன்றவைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென்ற கொள்கையுடன், ஒரு தமிழர் எதிர்ப்பு இயக்கம் ஆரம்பமாகியிருக்கிறதாம்.

"இப்படி தமிழருக்கு எதிராக உத்தேசிக்கப்பட்டிருக்கும் இந்த பகிஷ்கார நடிவடிக்கைகளின் விளைவாக, நாடு முழுமையிலும் பரவலான முறையில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்ட முடியாத நிலை உருவாகும்"

என்று, இலங்கைப் பிரதமர் பண்டா எச்சரித்திருக்கிறாராம்.

இந்த இயக்கத்தில் இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலரும் இணைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"கடந்த பொதுத் தேர்தல்களுக்கு முன்னால், அரசாங்க மொழிப் பிரச்சினையில், தேசியக் கட்சியானது வகுப்புவாரி துவேஷத்தையும், குழப்பத்தையும் உருவாக்கிவிட்டிருந்தது. ஆனால் இப்போதைய சர்க்கார் அதை வெகுவாகத் திணிக்கப்பட்டு வருகிறது. இனிமேல், எந்த ஒரு பிரச்சினைக்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க சர்க்கார் தயங்காது என்றும் எச்சரிக்க விரும்புகிறேன்," என்றும் அவர் பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

தேர்தலுக்காக விரிவான போலீஸ் ஏற்பாடுகள்

சென்னை, பிப். 20—

சென்னை மாநிலமெங்கும் தேர்தல் ஏற்பாடுகள் சரிவர நடைபெறவும், 22,883 வாக்குப் பதிவு நிலையங்களைப் பாதுகாக்க சென்னை போலீஸ் அதிகாரிகள் விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளனராம்.

ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குப் போலீஸ் பிரிவுகள் துரிதமாகச் செல்லவும், அவர்களுக்கு வேண்டிய மற்ற வசதிகளும் செய்யப்பட்டு விட்டதாம்.

மாநிலம் முழுமையும் 10 தேர்தல் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறதாம்.

சேந்தமங்கலத்தில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம்

அண்ணு, மற்றும் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்

சேந்தமங்கலம், பிப். 20—

சேந்தமங்கலம் சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் தோழர் சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தம் அவர்களை ஆதரித்து நடைபெற்ற மாபெரும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு, கழகத் தோழர்களை பொதுமக்கள் ஆதரிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அரியதோர் உரை நிகழ்த்தினுர்.

இப்பொதுக் கூட்டத்தையொட்டி, அன்று காலை தி. மு. கழகத் தோழர்கள் 'ஆதரவாளர்களடங்கிய சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு சேந்தமங்கலம் பிர்க்கா முழுமையிலும் நடைபெற்று, பின்னர் இரவு 7 மணியளவில் பொதுக்கூட்டத் திடலை வந்தடைந்தது.

இரவு 8 மணி அளவில் தோழர் ஆர். எம். பழனிமுத்து தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று,

தோழர்கள் டி. வி. சுந்தரராசன், அ. பொன்னம்பலனுர், ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோர் பேசியபின், இறுதியில் அண்ணு அவர்கள் சொற்பொழிவாற்றினுர். (ந-நி.)

★

மற்ற ஊர்களில்:

★

திருச்செங்கோடு:

திருச்செங்கோடு தி. மு. கழகச் சார்பில், கடந்த 16-ந் தேதியன்று இரவு தோழர் எம், இராசன் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் நடேசு, இராமசாமி ஆகியோரின் ஓரங்க நாடகம் நடைபெற்றது.

தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்கள் தி. மு. கழக அபேட்சகர்களுக்கு மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டு சிறிது நேரம் பேசினபின், அண்ணு அவர்கள் சுருக்கமாகச் சிறிது நேரம் பேசினுர்.

மறுநாள் பகல், பஞ்சாயத்துப் போர்டு சார்பில் தமத்தளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு, மீண்டும் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு அரியதோர் உரை நிகழ்த்தினுர். இக்கூட்டத்திற்குத் தோழர் எஸ். பி. இரங்கசாமி தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். பி. சின்னையன், என். ஏ. நடேச ஆகியோரும் பேசினர்.

மீஞ்சூர்:

18-2-57 மாலை 6-மணியளவில் மீஞ்சூர் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் என். வி. தங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனுர் சிறிதுநேரம் பேசியபின், அண்ணு அவர்கள் தி. மு. கழகத்தின் தேர்தல் ஈடுபாட்டை விளக்கியும், இன்றைய அரசியல் நிலைமையை விவரித்தும் அரியதோர் கருத்துரை வழங்கினுர்.

அண்ணு அவர்களுக்குப் பல்வேறு மன்றங்களின் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்து கருத்து விளக்கம் பெற்றனர்.

வல்லூர்:

18.2-57 மாலை 5-மணிக்கு வல்லூர் (பொன்னேரி வட்டம்) தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

அண்ணு அவர்கள் காங்கிரசின் போக்கைக் குறித்தும், கழகத்தின் சேவையைப் பற்றியும் விளக்கி அரியதோர் சொற்பொழிவாற்றினுர்.

தோழர் சாமிநாதன் தி. மு, கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 30 அண்ணு அவர்களிடம் தந்தார்.

தோழர்கள் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, ஓ. செங்கம் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழ் நாட்டு கம்யூனிஸ்டுகளின் தந்தையர் நாட்டில்

நாஸ்தீகப் பிரச்சாரம் தீவிரமாகிறது

நாடகங்கள் மூலமும் பிரச்சாரம் செய்ய கட்டளை

ரஷ்யாவில் உள்ள இளைஞர் சங்கங்கள், விஞ்ஞான ரீதியான நாஸ்தீகப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தவேண்டும் என்று இளைஞர் கம்யூனிஸ்டு மத்திய கமிட்டி விதி செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

இந்த விதி, இளைஞர் கம்யூனிஸ்டு இதழில் வெளிவந்துள்ளதாம்.

பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள், டாக்டர்கள், எஞ்சினீயர்கள் எல்லாம் இந்த நாஸ்தீகப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய கமிட்டி, கிளைகளுக்கு வற்புறுத்திக் கூறியுள்ளதாம்.

இந்தத் தகவலை மாஸ்கோ வானொலி கூறியிருக்கிறது.

நாடகங்கள்

மதத்திற்கு எதிராகவும் விஞ்ஞான ரீதியான நாஸ்திகத்தைப் பரப்பவுமான பிரச்சாரம் செய்ய, ஆங்காங்கே 'அமெச்சூர்' நாடகக் குழுக்கள் அமைத்து, நாடகங்கள் மூலமும் பிரச்சாரம் செய்ய வேண்டுமெனவும் அந்த விதி கூறுவதாக மாஸ்கோ வானொலி தெரிவிக்கிறது.

வட நாட்டுமுதலாளிகளுக்கு டெல்லி காட்டும் சலுகை

தமிழ் மக்களுக்கு இழைக்கும் அநீதி

கடலைச் சூதாட்ட மோசடி அம்பலமாகிறது!

வனஸ்பதி — முக்கியமாக வெள்ளைக்கார முதலாளிகள், மார்வாடி முதலாளிகள் ஆகியவர்களால் நடத்தப்படும் தொழில்!

டால்டா — வெள்ளைக்கார லீவர் பிரதர்ஸ் கம்பெனியின் சரக்கு.

வனஸ்பதி—ஜி. டி. பிர்லாவின் சரக்கு! இந்த இரு சரக்குகளுக்கும் ஏற்றுமதி வரி கிடையாது.

ஆனால், தமிழ் நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் கடலை எண்ணெய்க்கு மாத்திரம் ஏற்றுமதி வரி டன்னுக்கு ரூ. 150 என்று இந்திய சர்க்கார் விதிக்கிறது.

இந்த அநீதியான வரி விதிப்புக் கொள்கையால் வெள்ளையனின், வடநாட்டு முதலாளிகளின் எண்ணெய்த் தொழில் வளர்கிறது! நமது தமிழ் நாட்டு தடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த கடலெண்ணெய் உற்பத்திக்காரர்களின் தொழில் தேய்ந்து கொண்டே வருகிறது! தமிழர்களுடைய நலனை டி. டி. கிருஷ்ணமாச்சாரி பாதுகாக்கும் இலட்சணம் இந்த வகையில்தான் இருக்கிறது!

மேற்படி தடுத்தர வர்க்கத்தினரின் எண்ணெய் உற்பத்தியை வெளிநாட்டுக்கு அனுப்பவும் போதிய வகைசெய்து தரப்படவில்லை. ஒரு வருடமாக ஏற்றுமதிக்கு அனுமதி இல்லை. எனவே, உள்நாட்டுத் தேவைபோக மிச்சமுள்ள எண்ணெய் விற்பனையாகாமல் இங்கே தேங்கிவிடுகிறது. இதன் விளைவாக இந்த நடுத்தர வர்க்கத்தினர் தாங்கள் வேலைக்கு அமர்த்தியுள்ள ஆட்களை அவ்வப்பொழுது வேலையிலிருந்து நீக்கவேண்டியிருக்கிறது. இதனால் கடலெண்ணெய் தொழிலாளரிடையே வேலையின்மை அதிகரிக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சமாகும்.

இன்னொரு முக்கிய விஷயம்; அதுதான் பம்பாயில் தினசரி நடைபெறும் நிலக்கடலை, பருப்பு, எண்ணெய் சூதாட்டமாகும். தினசரி 50 ஆயிரம் கண்டி பருப்பு, அதாவது 1½ இலட்சம் மூட்டை பருப்பு இந்தச் சூதாட்டத்தில் ஈடுபடுத்தப்படுகிறது. இதில் ஒரு பரிதாபம் என்னவென்றால் மத்திய அரசாங்கமே நியமித்துள்ள வாய்தா வியாபாரக் கமிஷனின் ஆதரவுடனும், மேற்பார்வையிலும் இந்தச் சூதாட்டம் நடக்கிறது. நிமிடத்திற்கு நிமிடம் அந்தச் 'சூதாட்ட மார்க்கெட்'டில் வேர்க்கடலையின் விலை ஏறுகிறது — இறங்குகிறது. நமது தமிழ் நாட்டு வேர்க்கடலை உற்பத்தியாளர், எண்ணெய் உற்பத்தியாளர் ஆகியவர்களுடைய 'தலைவிதி'யை அந்த மார்வாடி சூதாட்டக்காரர்கள் நிர்ணயித்து வருகிறார்கள். இது நம்மவரின் நன்மைக்குப் பாதகமாகவும், மார்வாடிகளின் நன்மைக்கு அனுகூலமாகவும் இருப்பதில் வியப்பில்லை. அந்தச் சூதாட்ட மார்க்கெட்டை நம்பமுடியாமல் தமிழ்நாட்டில் இந்த எண்ணெய்த் தொழிலில் உள்ளவர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த எண்ணெய்த் தொழிலாளர் கண்டி பருப்பை ரூ. 160-க்கு வாங்குவதாக வைத்துக்கொள்வோம். அதை எண்ணெயாக்க ஒரு கண்டி பருப்புக்கு ரூ. 8-ஐ அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு கட்டவேண்டும். ரூ. 2-8-0ஐ விற்பனை வரியாகக் கட்ட வேண்டும், இப்படி எண்ணெய் உற்பத்தி ஆனவுடன் பம்பாய் மார்க்கெட்டில் எண்ணெய் விலை குறைந்தால் நமது எண்ணெய் உற்பத்தியாளர்களும், எண்ணெய் விலையைக் குறைத்து கஷ்டப்படவேண்டியிருக்கிறது. இந்த அக்கிரமம் என்று ஒழியுமோ?

—20-2-57 'சுதந்திரம்' இதழில், தோழர் பி. எஸ். சுப்புரத்தினம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு இங்கு தமிழர்கள் அலைகின்றனர். இந்த மானங்கெட்ட நிலை உருவாகக் காரணம், தன்மானமிக்க தமிழ் அமைச்சரவை தமிழகத்தில் இல்லாததுதான் என்பதை, வாக்காளர்களே! எங்களின் வழித்தோன்றல்களே! எண்ணுங்கள்—எழுச் சிபெறுங்கள்.

"எங்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, கண்ணியம் காப்பாற்றப்படுமானல், நிச்சயம் தமிழகத்திலாவது மானமுள்ள செயல்வீரர்களின் அமைச்சரவைஇருக்கவேண்டும். அதற்கு இந்தத் தேர்தல் ஒரு நல்ல வாய்ப்பு என்பதை எங்களின் உற்ருர் உறவினர்களாகிய உங்களுக்கு நினைப்பூட்டுகிருேம்.

"இந்தத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நல்ல செயல்வீரர்களடங்கிய இயக்கம். அந்த இயக்கத்தினர்தான் பல தடவைகளில் இலங்கை வாழ் தமிழர் நிலைபற்றிப் பல நல்ல தீர்மானங்கள் நிறைவேற்றி, ஆதரவும் அன்பும் காட்டியிருக்கின்றனர். அத்தகைய செயல்வீரர்களைக் கொண்ட இயக்கத்தினர் இந்தத் தேர்தலில் பெருவாரியாக வெற்றி பெற்ருல், நிச்சயம் கடல்கடந்த நாடுகளில் வாழும் எங்கள் போன்ற ஏழைத் தமிழ் மக்களின் வாழ்வு சிறக்கும் வளம் பிறக்குமென நிச்சயமாக நம்புகின்ருேம். ஆகையால் பெருமைக்குரிய வாக்காளப் பெருமக்களே! எங்களின் உற்ற நண்பர்களே! உற்ருர்களே! உடன் பிறந்தார்களே! உதய சூரியன் வெற்றிபெற உதவுங்கள்; உழையுங்கள்"

பல இலட்சம் ரூபாய் பாழடிக்க முடிவு

சென்னையில் 12,000 அம்பர் இராட்டைகளாம்

சென்னை, பிப். 19—

எப்ரல் முதல் ஆரம்பமாகும் நிதி ஆண்டில் சென்னை மாநிலத்தில் மட்டும் 12,000 அம்பர் சர்க்காக்கள் நூல் உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென இறுதியாக முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மலேயாவில் 11 மாநிலங்கள் மலரும்

கூட்டாட்சி ஏற்படுத்த நிபுணர் குழு சிபாரிசு

மலேயாவுக்கு ஒரு அரசியல் அமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த பல நாடுகளைச் சேர்ந்த சட்ட நிபுணர்களின் சிபாரிசுகள் பிரிட்டிஷ் அரசியாரிடம் தரப்பட்டுவிட்டதாம்.

ஆகஸ்டு மாதம் மலேயா சுதந்திர நாடாகிறது. பலம் பொருந்திய ஒரு மத்திய அரசாங்கம் இருக்கவேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதாம்.

தற்போது மலேயாவில் சுல்தானின் ஆட்சியின்கீழ் ஒன்பது சமஸ்தானங்கள் இருக்கின்றன; சுதந்திரம்பெற்ற பின்னர் இந்த ஒன்பதும் மாநிலங்களாகிவிடும். மலாகா, பிளுங்கும் தனிப்பட்ட மாநிலங்களாகி மொத்தம் மலேயாவில் 11 மாநிலங்கள் இயங்கும்.

தேர்தல் ஊர்வலங்கள்

சென்னை—பேசின்பிரிட்ஜ்

24—2—57 காலை 7-30 மணிக்கு, சென்னை — பேசின்பிரிட்ஜ் தொகுதியில் தேர்தல் பிரச்சார ஊர்வலம் ஒன்று, மூலக்கொத்தளம் அழகிரி மன்ற அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, 5-வது, 7-வது வட்டங்கள் முழுவதும் வந்து முடிவுறும்.

கடந்த ஒன்பது ஆண்டுக்காலமாக காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் பட்டுவரும் கொடுமைகளை விளக்கும் ஓவியங்கள், இசை விருந்துகள், மற்றும் சிறந்த ஏற்பாடுகளுடன் நடைபெறவிருக்கும் இந்த ஊர்வலத்தை தோழர் எஸ். எம். துரைராஜ் அவர்கள் முன்னின்று நடத்திவைப்பார். கழக அபேட்சகர் தோழர் என். வி. நடராசன் அவர்களும் மற்ற தோழர்களும் கலந்துகொள்வர். தாய்மார்களும் தோழர்களும் பெருந்திரளாக வருகை தந்து சிறப்பிக்குமாறு சென்னை 7-வது வட்டம் அழகிரி மன்றச் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை—திருவொற்றியூர்:

24—2—57 காலை 8 மணிக்கு, தொகுதி அபேட்சகர் தோழர் என். சீவரத்தினம் அவர்களை ஆதரித்து, 1-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையிலிருந்து தேர்தல் ஊர்வலம் புறப்பட்டு முதல் வட்டம் முழுமையிலும் நடைபெறும். வட்டத்தைச் சேர்ந்த மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவைகளும் ஊர்வலத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை—எழும்பூர்:

24—2—57 காலை 8 மணிக்கு, தோழர் பி. பாலசுப்பிரமணியம், தோழர் க. அன்பழகன் ஆகியவர்களை ஆதரித்து கிளைக் கழகச் சார்பில் தேர்தல் ஊர்வலம் புறப்பட்டு, எழும்பூர், கோமளீசுவரன்பேட்டை ஆகிய வட்டங்களைச் ;சுற்றிவரும். வட்டத்திலுள்ள மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவைகள் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன,

சென்னை—பெரியமேட்டு:

24—2—57 பகல் 2 மணிக்கு, தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியவர்களை ஆதரித்து, கிளைக் கழகச் சார்பில் தேர்தல் ஊர்வலம் நடைபெறும். கழகத் தோழர்கள் அனுதாபிகள், சார்பு மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் கழகக் கொடிகள், விளம்பரத் தட்டிகளுடன் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இராயப்பேட்டை:

24—2—57 காலை 7 மணிக்கு, சென்னை 37-வது வட்டம் இராயப்பேட்டை கடைத்தெரு சாலை, எண். 23 கழகக் கட்டிடத்திலிருந்து தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரை ஆதரித்து தேர்தல் ஊர்வலம் புறப்படும். கழகத் தோழர்கள், மற்றும் மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சைதாப்பேட்டை:

24—2—57 பிற்பகல் 2 மணிக்கு, சென்னை — சைதாப்பேட்டை 48-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையிலிருந்து தேர்தல் ஊர்வலம் புறப்படும். இவ்வூர்வலத்தில், தியாகராயநகர் தொகுதி தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை - வண்ணை:

24—2—57 பகல் 1 மணிக்கு, வண்ணைத் தொகுதி அபேட்சகர் தோழர் என். ஜீவரத்தினம் அவர்களை ஆதரித்து, வண்ணைத் தொகுதி தி. மு. கழக மத்தியத் தேர்தல் நிலையத்திலிருந்து தோழர் ஆர். சுந்தரராஜ் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, முறையே 1, 2, 3, 4-வது வட்ட முழுமையிலும் நடைபெறும். தோழர்கள் அனைவரும் சைக்கிள்களுடன் குறித்த நேரத்தில் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை-நுங்கம்பாக்கம்:

24—2—57 காலை 7 மணிக்கு, தென் சென்னை பாராளுமன்றத் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் பி. பாலசுப்பிரமணியம், ஆயிரம் விளக்கு சட்டசபைத் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரை ஆதரித்து 34-வது வட்டக் கிளைக் கழகப் பணிமனையிலிருந்து (8, சி. இராமநாய்க்கன் தெரு) சைக்கிள் ஊர்வலம் புறப்படும். வட்டத்திலுள்ள மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோமளீசுவரன்பேட்டை:

24—2—57 காலை 9 மணிக்கு, சென்னை 31-வதுவட்டத் தி. மு. கழகச் சார்பில், கோமளீசுவரன்பேட்டை வீரபத்திர ஆச்சாரி தெரு, எண். 32 பணிமனையிலிருந்து, தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் ஊர்வலம் புறப்படும். தோழர் க. அன்பழகன் ஊர்வலத்தில் கலந்துகொள்வார். சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவை ஊர்வலத்தில் ;கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

கொத்தவாச்சேரி:

23—2—57 காலை 8 மணிக்கு, கடலூர் வட்டம் கொத்தவாச்சேரியில் கிளைக் கழகச் சார்பில் தேர்தல் ஊர்வலம் நடைபெறும். ஊர்வலத்தின் போது பல இடங்களிலும், வீடுகளிலும் கழகக் கொடியேற்றுவிக்கப்படும்.

விளாப்பாக்கம்:

24—2—57 காலை 8 மணிக்கு, வ. ஆ. மாவட்டம் சட்டசபை ஆற்காடு தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் இலக்குமணன் அவர்களை ஆதரித்து விளாப்பாக்கம் தி. மு. கழகக் கிளை சார்பில் தோழர் பீதாம்பரம் தலைமையில் ஊர்வலம் நடைபெறும். கிளைக் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை கலைமணி மன்ற ஆண்டுவிழா

25—2—57 மாலை 6-மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஐயா முதலி தெருவில், கலைமணி மன்ற ஆண்டுவிழாப் பொதுக்கூட்டம் தோழர் வி. எஸ். நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசுவர்.

க. அறிவழகன்

சுற்றுப்பயணம்

பிப். 22: தாராபுரம் தொகுதி; 23: உடுமலைப்பேட்டை; 24: கோயம்புத்தூர்-2 தொகுதி கிராமங்கள்; 25: கோவை நகரம்; 26: சென்னை.

தேர்தல் கூட்டங்கள்

★

சென்னை - பெரம்பூர்:

24—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை பெரம்பூர் தனித் தொகுதி அபேட்சகர் தோழியர் சத்தியவாணி முத்து அவர்களை ஆதரித்து 6-வது வட்டம் தி. மு. கழகத் தேர்தல் குழு சார்பில் வியாசர்பாடி மேக்கின்புரத்தில் தோழர் அன்பிற்கரசன் தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். அக்கூட்டத்தில் டி. ஐ. சைக்கிள் பாக்டரி தொழிற்சாலைத் தொழிலாளர் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வழங்கப்படும்.

சென்னை - பெரியமெட்டு

24—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை - பெரியமெட்டு மேடக்ஸ் தெருவில் (ஜெனரல் காலின்ஸ்ரோடு அருகில்) 26-வது வட்டத் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் வி. தீர்த்தகிரி தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வி. எஸ். கோவிந்தராசன், தோழியர் அருண்மொழி - வில்வம் ஆகியோர் பேசுவர்.

கொருக்குப்பேட்டை:

23—2—57 மாலை 6-மணிக்கு, சென்னை—கொருக்குப்பேட்டை காக்காத் தோப்பில் (லாலா குண்டா) 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து தோழர் கே. அப்துல் ரகீம் தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ரகமத்துல்லா (உருது மொழியில்) தோழியர் ஜி. பி. அமுதா ஆகியோர் பேசுவர்.

சென்னை—யானைகவுனி:

23—2—57 மாலை, சென்னை யானைகவுனி பொம்மலைய்யர் தெருவில் சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து தோழர் எஸ். இராசரத்தினம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பஞ்சாட்சரம், வி. ஆர். நாராயணசாமி ஆகியோர் பேசுவர்.

அரும்பாக்கம்:

24—2—57 மாலை 6-மணிக்கு, தோழர் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. எஸ். ஜேசுபாதம் ஆகியோரை ஆதரித்து, சென்னை அமைந்தகரை அடுத்த அரும்பாக்கம் தோழமைக் கழகச் சார்பில் தோழர் பாலசுந்தரம் தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. எஸ். வேணு, ஏ. எஸ். ஜேசுபாதம் ஆகியோர் பேசுவர்.

சேந்தமங்கலம்:

24—2—57 மாலை 6-30 மணிக்கு சேந்தமங்கலம் பெருமாள் கோயில் மைதானத்தில் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், வி. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசுவர்.

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு	ரூ.	அ.	பை
21—2—57 இதழ்ப்படி ...	50,618	4	10
மதுரை-ம. புளியங்குன்றம் தி. மு. க.-அறிவியல் அரங்கம்—எம். தனுக்கோடி மூலம்: ...	3	8	0
புவனகிரி-கீரப்பாளையம் தி. மு. க. —மா. கன்னையன் மூலம்; ...	25	0	0
திருத்துறைப்பூண்டி-கரியாப்பட்டினம் தி.மு.க....	20	0	0
கள்ளக்குறிச்சி-எடுத்த வாயநத்தம் மு. கோவிந்தராசு ...	5	0	0
தேவதானம் தி. மு. கழகம்—மா. இரத்தினம் மூலம்: ...	5	0	0
குமாரபாளையம் சி. கந்தசாமி ...	5	0	0
பாளையங்கோட்டை ஏ. தங்கையா ...	5	0	0
பெங்களூர் ஜாலஅல்லி ஆர். கிருஷ்ணமூர்த்தி ...	5	0	0
சிங்கப்பூர் கே. எஸ். இராமசாமி ...	20	0	0
19—1—57 திருவொற்றியூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் மூலம்:			
இம்பீரியல் புகையிலை கம்பெனித் தொழிலாளர்கள் ...	56	0	0
தி. மு. கழகம் ...	88	0	0
விம்கோ கம்பெனித் தொழிலாளர்கள் ...	105	0	0
தி. மு. க. ஆதரவாளர்கள் ...	1	0	0
ஆதரவாளர்களில் ஒருவர் ...	0	8	0
கொடுங்கையூர் தி. மு. கழகம் ...	16	0	0
தாங்கல் கே. வி. கே. சாமி நினைவு மன்றம் ...	27	7	6
லலிதா இரவு பாடசாலை ...	2	5	6
தியாகராயர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ...	6	9	6
'நம் நாடு' விற்பனையாளர் ...	1	9	0
இராயபுரம் தமிழ் வளர்ச்சி மன்றம் ...	2	1	3
தனியார் நன்கொடை ...	3	12	3
நீலகிரி தொட்டக்கொம்பை குந்தை தி. மு. க. ...	130	0	0
நாகப்பட்டினம்-திருப்பூண்டி தி. மு. கழகம் ...	5	0	0
எரகுடி ஆர். கே. ரெங்கராசன் ...	3	0	0
திண்டுக்கல்-நாகல்நகர் நெடுஞ்செழியன் படிப்பகம் ...	10	11	0
சாயர்புரம்-சுப்பிரமணியபுரம் இரா. அதி மணி மூலம்: ...	50	0	0
செங்கோட்டை மு. கிருஷ்ணன் ...	1	0	0
" கே. சுப்பிரமணியம் ...	1	0	0
அகரம் தி. மு. கழகம்—எம். எம். மணி மூலம் - ...	15	0	0
யாக்காணம் சி. இராமசாமி ...	2	0	0
நெல்லை-தச்சநல்லூர் எஸ். சங்கரபாண்டியன் ...	2	0	0
மணப்பாறை தி. மு. கழகம்—காசிநாதன் மூலம்: ...	251	0	0
சிங்கப்பூர் தி. மு. கழகம்—பொதுச்செயலாளர் எஸ். சிங்காரவேலு மூலம் ...	1001	0	0

ஆக மொத்தம் ரூ. **52,493-12-10**

சென்னை முத்தமிழ் வளர்ச்சி நாடக மன்றப் பொதுக்கூட்டம்

23—2—57 மாலை, சென்னை 18-வது வட்டம் (புளியந்தோப்பு) சுந்தரபுரம் முத்தமிழ் வளர்ச்சி நாடக மன்றச் சார்பில் தோழர் என். அப்பாதுரை தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

சென்னை சிற்றுண்டி நிலைய பணியாளர் சங்கப்பொதுக்கூட்டம்

24-2-57 இரவு 7-30 மணிக்கு, சென்னை பூங்கா நகரில் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் கோகுல கிருட்டிணன், கே. கோவிந்தசாமி, க. அன்பழகன், பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர்.

சென்னை 4-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு:

23—2—57 இரவு 8 மணிக்கு, சென்னை - வண்ணை காளிங்கராய முதலி தெரு, எண். 8 பணிமனையில், 4-வது வட்ட தி. மு. கழகத் தேர்தல் ஊழியர் கூட்டம் நடைபெறும். கழக அபேட்சகர் தோழர் என். சீவரத்தினம் அவர்களும் கலந்துகொள்வார்.

சென்னையில் அண்ணா

தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம்

★

23--2--57 மாலை 6-மணிக்கு

சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்கா ரிட்சி தெருவில்

★

தலைவர்:

அ. பொ. அரசு எம். சி.

பேசுவோர்:

அண்ணா

பி. பாலசுப்பிரமணியம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.